எஸ்ஆர்எம் கல்வி நிறுவனத்தில் மே 6,7 தேதிகளில் தேசிய சிறுதானிய மாநாடு

மத்திய இணை அமைச்சர் பிரகலாத் சிங் பட்டேல் துவக்குகிறார்

சென்னை, ஏப்.29–

சென்னை காட்டாங்குளத்தூர் எஸ்ஆர்எம் கல்வி நிறுவன வளாகத்தில் மே மாதம் 6 மற்றும் 7ந் தேதிகளில் தேசிய சிறுதானிய தொழில் மாநாடு நடைபெறுகிறது. தஞ்சாவூரில் இயங்கி வரும் தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை நிறுவனம் மற்றும் எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் எஸ்ஆர்எம் வேளாண் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்தும் இந்த மாநாட்டினை மத்திய உணவு பதப்படுத்தல் தொழில்கள் இணை அமைச்சர் பிரகலாத் சிங் பட்டேல் தொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் மக்களவை தொகுதி உறுப்பினரும், எஸ்ஆர்எம் கல்வி நிறுவனத்தின் வேந்தருமான டி. ஆர். பாரிவேந்தர் தலைமை வகிக்கிறார்.

மாநாட்டில் வேளாண் விஞ்ஞானிகள், தொழில்முனைவோர், சுய தொழில் குழுவினர், விவசாயிகள் என சுமார் 3 ஆயிரம் பேர் பங்கேற்க உள்ளனர்.

இம்மாநாட்டையொட்டி அரசு, தனியார் நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் 200 அரங்குகள் அடங்கிய கண்காட்சி நடைபெறுகிறது.

தஞ்சாவூரில் இயங்கிவரும் தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை நிறுவனம் பொறுப்பு இயக்குனர் லோகநாதன், எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் துணைவேந்தர் சி. முத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் பேசுகையில், இந்தியர்கள் தொடக்கத்தில் பாரம்பரியமாக சிறுதானிய உணவு வகைகளை பயன்படுத்தி வந்துள்ளனர். உணவு பழக்கம் மாற்றத்தின் காரணமாக அரிசி, கோதுமை உணவுகளை பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர். எனவே மக்களுக்கு சிறுதானிய உணவு வகைகளில் ஆர்வம் ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எல்லா அரசு அமைப்புகளும் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகின்றன. உணவு முறைகள் மாற்றம் காரணமாக மக்களின் உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே உடல் ஆரோக்கியத்திற்கு தேவையான சத்துக்கள் உள்ள உணவாக சிறுதானிய உணவு அமைந்துள்ளது என்று தெரிவித்தனர்.

3,000 பேர் பங்கேற்பு

2 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் நாடு முழுவதிலுமிருந்து வேளாண் விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள், உழவர் உற்பத்தி சங்கங்கள், சுயஉதவி குழுவினர், மற்றும் வேளாண் கல்லூரி மாணவர்கள் என சுமார் 3,000 பேர் பங்கேற்கின்றனர். மாநாட்டையொட்டி அரசு, தனியார் நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் 200 அரங்குகள் அடங்கிய கண்காட்சி நடைபெறுகிறது.

இம்மாநாடு கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியில் பங்கேற்க விரும்புவார்கள் கீழ்கண்ட *http://niftemt.ac.in.IYoMII. php.* இணையதளம் மூலமாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்தியாவில் ரூ.5,500 கோடியில் ஜோஸ் ஆலுக்காஸ் மேலும் 100 புதிய ஷோரூம்கள்

சென்னை, ஏப்.29

'இந்தியாவில் ரூ.5 ஆயிரத்து 500 கோடியில் 100 புதிய ஷோரூம்கள் திறக்கப்பட உள்ளது' என சென்னையில் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் தலைவர் ஜோஸ் ஆலுக்கா நிருபர்களிடம் தெரிவித்தார்.

தென்னிந்தியாவின் முன்னணி தங்க நகை விற்பனை நிறுவனங்களில் ஒன்றாக ஜோஸ் ஆலுக்காஸ் இருந்து வருகிறது. கேரள மாநிலம் திருச்சூரில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், இந்தியா மற்றும் பிற நாடுகளிலும் விற்பனையகங்களை திறந்து முன்னோடி நிறுவனமாக இருக்கிறது.

இந்தியாவில் விற்கப்படும் தங்க நகைகளில் பி.ஐ.எஸ். 916 தர முத்திரை கட்டாயம் என மத்திய அரசு அறிவித்தபோது, இந்த நிறுவனத்தின் தலைவர் ஜோஸ் ஆலுக்கா அதற்கான பிரச்சாரம் மேற்கொண்டார். தற்போது தங்க நகைகளுக்கான எச்.யு.ஐ.டி. என்ற சான்றிதழையும் அவர் பெருமையுடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறார்.

ஜோஸ் ஆலுக்காஸ் நகைகள், அதன் எடைக்கு சமமான உண்மையான மதிப்பைக் கொண்டவை என மக்கள் தைரியமாக நம்புவதால்தான், தங்கத்தில் அதிகமாக முதலீடு செய்வதாக ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். இந்தநிலையில் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் குளோபல் அம்பாசிடராக நடிகர் மாதவனை நியமித்து இருக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் 100 புதிய ஷோரூம்களை திறக்க இருப்பதாக ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தியாவின் முன்னணி நகை வடிவமைப்பாளர்களில் ஒருவருடன் கூட்டு சேர்ந்து புதிய வடிவிலான நகைகள் வெகுவிரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த சந்திப்பின் போது, ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்கள் வர்கீஸ் ஆலுக்கா, பால் ஜெ.ஆலுக்கா மற்றும் ஜான் ஆலுக்கா, விளம்பர தூதர் நடிகர் மாதவன் ஆகியோர் உடன் இருந்தனர்.

நடிகர் மாதவனுடன், நடிகை கீர்த்தி சுரேசும் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்துக்காக எதிர்காலத்தில் பிரச்சாரம் மேற்கொள்ள இருக்கிறார்.

பிரபல 'கதக்' மேதை பிர்ஜு மகராஜ் நினைவாக சென்னையில் 2 நாள் 'கதக்' நாட்டிய நிகழ்ச்சி

சென்னை, ஏப்.29–

பழம்பெரும் 'கதக்' நடனக் கலைஞர் பத்ம விபூஷன் பண்டிட் பிர்ஜு மகராஜ்ஜின் நினைவாக சென்னையில் ஸ்மிருதி விழா நடைபெற உள்ளது. கதக் தர்பன் டிரஸ்ட் (கலை இயக்குனர் நேஹா பானர்ஜி) சார்பில் சென்னை மியூசிக் அகாடமியில் இம்மாதம் 30, மே 1ந் தேதிகளில் முதன்முறையாக சென்னையில் நடக்கிறது. முதல் நாள் மினி ஆடிட்டோரியம், 2ம் நாள் மெயின் ஆடிட்டோரியம்.

சென்னை நீலாங்கரையில் உள்ள கதக் தர்பன் இன்ஸ்டிடியூட்டில் 30ந் தேதியும், மே 1ந் தேதியும் பண்டிட் பிர்ஜு மகராஜ்ஜியின் மூத்த சீடர் சாஸ்வதி சென் நடத்தும் பயிற்சி பட்டறை நடக்கிறது.

டாக்டர் புரு தாதீச்ஜி மற்றும் கனகா ஸ்ரீனிவாசன்ஜி ஆகியோரின் புத்தக வெளியீடு, விரிவுரை விளக்கங்கள், பண்டிட் பிர்ஜு மகராஜ்ஜியின் மூத்த மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகிறது.

சென்னை மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து விரிவுரையாளர்கள் பங்கேற்கிறார்கள்.

சங்கீத நாடக அகாடமி விருது பெற்ற 5 கலைஞர்கள் மறைந்த பிர்ஜு மகராஜ்ஜிக்கு ஒரே மேடையில் அஞ்சலி செலுத்துவார்கள். மகன் தீபக் மகராஜ்ஜி சென்னையில் முதல் முறையாக மே 1 ஆம் தேதி மியூசிக் அகாடமி மெயின் ஆடிட்டோரியத்தில் கலை நிகழ்ச்சி நடத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுந்தரம் ஹோம் பைனான்ஸ் நிறுவனம் சிறிய வர்த்தகர்களுக்கு கடன் உதவி வழங்க தூத்துக்குடியில் புதிய கிளையை திறந்துள்ளது. இக்கிளையை தூத்துக்குடி பவித்ரா டயர்ஸ் உரிமையாளர் செல்வக்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் நிறுவனத்தின் தூத்துக்குடி கிளை அலுவலர்கள் உள்ளனர்.

சவீதா பல் மருத்துவக் கல்லூரி – மருத்துவமனையில் 'மூலக்கூறு மருத்துவத்தில் புதுமைகள் – மொழிபெயர்ப்பு ஆராய்ச்சி' சர்வதேச மாநாடு

சென்னை, ஏப்.29

'மூலக்கூறு மருத்துவத்தில் புதுமைகள் மற்றும் மொழி பெயர்ப்பு ஆராய்ச்சி' என்னும் சர்வதேச மாநாட்டை மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி சங்கத்துடன் இணைந்து சவீதா பல் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை நடத்தியது.

இந்த மாநாட்டில் இந்தியா முழுவதும் இருந்து 16 கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 204 பேர் பங்கேற்றனர். இதில் மியான்மர் நாட்டின் கவுரவ தூதர் ரங்கநாத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில் சிட்னி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கைலி வில்லியம்ஸ் "மருந்தியல் பயிற்சி ஆராய்ச்சி மற்றும் கல்வி" என்ற தலைப்பில் பேசினார்.

மேலும் சர்வதேச பேச்சாளர்களான பேராசிரியர் பிரையன் ஆலிவர் மற்றும் டாக்டர் கமால் துவா ஆகியோர் முறையே "சுவாச நோய்களில் செல்லுலார் மற்றும் மூலக்கூறு வழிமுறைகளை ஆய்வு செய்தல்" மற்றும் "நுரையீரல் நோயில் மூலக்கூறு நிலைக்கு மருந்து வினியோகத்தை பிரித்தெடுத்தல்" என்ற தலைப்பில் பேசினார்கள். இவை அனைத்தும் இந்த மாநாட்டில் பங்கேற்ற அனைவருக்கும் பயனுள்ள வகையில் இருந்தன.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உயிரியல் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை தலைவர் எப்.டி. சாலமன் "மருத்துவ மரபியலில் சமீபத்திய போக்குகள்' என்ற தலைப்பில் பேசினார். "புற்றுநோய் எதிர்ப்பு சிகிச்சைக்கான நானோகாம்போசிட் அடிப்படையிலான மருந்துகள்" என்ற தலைப்பில் லயோலா இன்ஸ்டிடியூட் ஆப் பிரான்டியர் எனர்ஜி இயக்குனர் எம். செல்வநாயகம் பேசினார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சுமார் 100 பிரதிநிதிகள் தங்களின் ஆராய்ச்சி கட்டுரைகள் மற்றும் மின்னணு–போஸ்டர்களை வழங்கினார்கள். மேலும் சிலர் 'மூலக்கூறு மருத்துவத்தின் புதுமைகள்' குறித்து உரையாற்றினார்கள். இதில் சிறப்பான கட்டுரைகள், மின்னணு–போஸ்டர்கள் மற்றும் உரையாற்றியவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவற்றை சிமாட்ஸ் பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் ஷீஜா வர்கீஸ் வழங்கினார்.

இந்த மாநாட்டில் சிமாட்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 101 பிரதிநிதிகள், பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 103 பிரதிநிதிகள் என 78 ஆண்களும், 126 பெண்களும் கலந்து கொண்டனர்.

அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், ஆர்.எஸ்.மங்காபுரம் கிராமம், பொன்பாடி அஞ்சல், முகவரியில் வசித்து வரும் திருமதி. ஜானகி பாய். க/பெ. ஜேசுதாஸ் என்பவரின் ஆதார் அட்டை எண். 5512 3167 4732 சுமார் 44 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் திருத்தணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான (வீட்டுமனை அசையா சொத்தின் ஆவண எண். 3305/2010 தேதி. 01.06.2010 அசல் ஆவணம் கைப்பையில் எடுத்துக் கொண்டு கடந்த 19.04.2023 அன்று மத்தூர் கேட் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் திருத்தணி பேருந்து நிலையம் வந்து பார்த்த போது தொலைந்துவிட்டது.. யாரேனும் அதனைக் கண்டு பிடித்தால், எனது கைபேசி எண். 9787218027 எண்ணுக்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஜானகிபாய்
க/பெ. ஜேசுதாஸ்
ஆர்.எஸ். மங்காபுரம் கிராமம்
பொன்பாடி போஸ்ட், திருத்தணி வட்டம்
திருவள்ளூர் மாவட்டம். செல் : 9787218027.

ACCEL LIMITED

[CIN: L30007TN1986PLC100219]
Regd. Office Address: 3rd Floor, SFI Complex, 178, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034.
Phone: 044-28222262; Email:companysecretary@accel-india.com
Website: www.accel-india.com

தபால் வாக்குமற்றும் உறுப்பினர்களுக்கு மின்–வாக்களிக்கும் வசதி பற்றிய அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013, ('சட்டம்') பிரிவு 108, 110 மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் ஏதேனும் இருந்தால் (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ திருத்தம் அல்லது மறு அமலாக்கம் உட்பட) மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014, ('விதிகள்') விதி 20 மற்றும் 22 மற்றும் செக்யூரிடீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 ('செபி பட்டியல் விதிமுறைகள்) விதி 44 மற்றும் இந்திய நிறுவனச் செயலர்கள் நிறுவனத்தால் ('SS2') வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட பொதுக் கூட்டங்கள் தொடர்பான செயலகத் தரநிலை மற்றும் 8 ஏப்ரல் 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்கள் 14/2020, 5 மே 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண் 3/2022 மற்றும் 28 டிசம்பர் 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 11/2022 மூலம் தபால் வாக்கு செயல்முறையை நடத்துவதற்கு கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தினால் ("MCA") பரிந்துரைக்கப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப (ஒட்டுமொத்தமாக "MCA சுற்றறிக்கை" என குறிப்பிடப்படுகிறது), மற்றும் பொருந்தக்கூடிய பிற சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஏதேனும் இருந்தால் அதன்படி, மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் தபால் வாக்கு முறையில் நிறுவனத்தின் முழு நேர இயக்குநராக திரு. எஸ்.வி. ராவ் [DIN: 06600739] அவர்களின் நியமனத்தை முறைப்படுத்துவதற்கு, நிறுவனம் உறுப்பினர்களின் ஒப்புதலைக் கோருகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் தபால் வாக்கு மூலம் நிறுவனத்தின் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 21, 2023 அன்று நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்தவர்களுக்கு ஏப்ரல் 27, 2023 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பு மற்றும் விளக்க அறிக்கை ஆகியவை மின்னணு முறையில் ஏப்ரல் 28, 2023 அன்று கம்பெனி அனுப்பியுள்ளது. இந்த அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.accel–india.com மற்றும் பங்குச் சந்தையின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்க தொலைதூர மின்வாக்களிக்கும் வசதியை வழங்குவதற்காக நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் [NSDL] சேவைகளில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்கான விரிவான நடைமுறை தபால் வாக்கு அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்கான விரிவான நடைமுறை அஞ்சல் வாக்குச்சீட்டு அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.தொலைதூர மின்வாக்களிப்பு ஞாயிற்றுக்கிழமை, 30 ஏப்ரல், 2023 அன்று காலை 09.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி திங்கட்கிழமை, 29 மே, 2023 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. திங்கட்கிழமை, 29 மே, 2023 அன்று மாலை 5.00 மணிக்கு பின்னர் (இந்திய நேரப்படி) மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது. மின்னணு வாக்குப்பதிவு தொகுதி முடக்கப்படும். அதன்பிறகு உறுப்பினர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதல் அல்லது மறுப்பை தொலைதூர மின்வாக்களிப்பு முறை மூலம் மட்டுமே தெரிவிக்க வேண்டும்.

என்எஸ்டிஎல் மின்–வாக்களிப்பு முறையிலிருந்து தொலைதூர மின்வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்கல்கள் இருந்தால், அது குறித்து பங்குதாரருக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQகள்) மற்றும் www.evoting.nsdl.comன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் பங்குதாரர்களுக்கான மின்–வாக்களிப்பு பயனர் கையேட்டை பார்வையிடலாம்.

புதன்கிழமை, 31 மே, 2023 அல்லது அதற்கு முன் தபால் வாக்குப்பதிவு முடிந்த 48 மணி நேரத்திற்குள் தபால் வாக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டு, நிறுவனத்தின் இணையதளத்தில் ஆய்வு செய்பவரின் அறிக்கையுடன் பதிவேற்றம் செய்யப்படும் மற்றும் பங்குச் சந்தைக்கு தெரிவிக்கப்படும்.

By the Order of the Board
For Accel Limited
Sd/-
N. R. Panicker
Managing Director
DIN: 00236198

Place: Chennai
Date: 28.04.2023

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்

CIN: - L17111TZ1977PLC000776

பதிவு அலுவலகம்: ஓமலூர் ரோடு, ஜாகீர் அம்மாபாளையம், சேலம்–636 302.

31 மார்ச் 2023ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த 3 மாதங்கள் 31.12.2022 (தணிக்கை யானது)	முடிந்த 3 மாதங்கள் 31.03.2023 (தணிக்கை யானது)	முடிந்த 3 மாதங்கள் 31.03.2022 (தணிக்கை யானது)	முடிந்த ஆண்டு 31.03.2023 (தணிக்கை யானது)	முடிந்த ஆண்டு 31.03.2022 (தணிக்கை யானது)
1	ஏ) செயல்பாடுகளிலிருந்து வருமானம்	69.73	74.26	61.72	290.94	221.08
	பி) இதர வருமானம்	0.93	1.65	0.23	3.95	1.83
	மொத்த வருமானம்	70.66	75.91	61.95	294.89	222.91
2	**செலவுகள்**					
	ஏ) கச்சா பொருட்கள் உபயோகம்	-	-	-	-	-
	பி) வர்த்தக பொருட்கள் வாங்கியது	-	-	-	-	-
	சி) முடிக்கப்பட்ட பொருட்களின் சரக்குகளில் மாற்றங்கள், நடைபெற்று வரும் பணிகள் மற்றும் வர்த்தக இருப்பு	-	-	-	-	-
	டி) ஊழியர் நல செலவுகள்	24.61	14.02	11.35	66.94	41.64
	இ) நிதி செலவுகள்	42.49	47.31	39.20	173.71	178.31
	எப்) தேய்மானம் மற்றும் அமார்டைசேஷன் செலவுகள்	13.33	13.85	15.08	53.85	60.31
	ஜி) மற்ற செலவுகள்	47.23	68.84	56.93	191.94	272.98
	மொத்த செலவுகள்	127.66	144.02	122.56	486.44	553.24
3	நிதி கட்டணங்களுக்கு பின் ஆனால் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் சாதாரண செயல்பாடுகள் மூலம் லாபம்/(நஷ்டம்) (1–2)	(57.00)	(68.11)	(60.61)	(191.55)	(330.33)
4	விலக்கு அயிட்டங்கள்	-	(1.57)	2.44	9.39	172.56
5	சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் லாபம்/ நஷ்டம் (3–4)	(57.00)	(66.54)	(63.05)	(200.94)	(502.89)
6	வரி செலவுகள்	-	-	-	23.48	7.44
7	சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு பின் நிகர லாபம்/நஷ்டம்	(57.00)	(66.54)	(63.05)	(224.42)	(510.33)
8	இதர விரிவான வருமானம்					
	i) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள்	-	-	-	-	-
	ii) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படாத அயிட்டங்கள் தொடர்பான வருமான வரி	-	-	-	-	-
	i) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படும் அயிட்டங்கள்	-	-	-	-	-
	ii) லாபம் அல்லது நஷ்டத்துக்கு மறுவகைப்படுத்தப்படும் அயிட்டங்கள் தொடர்பான வருமான வரி	-	-	-	-	-
9	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (7+8)	(57.00)	(66.54)	(63.05)	(224.42)	(510.33)
10	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ஒன்று ரூ. 10/–)	576.28	1,152.56	576.28	1,152.56	576.28
11	மறுமதிப்பீட்டு நீங்கலான இதர ஈக்விடி பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி	-	-	-	-	-
12	ஒரு பங்கு சம்பாத்தியம் (முகமதிப்பு ஒன்றுக்கு ரூ. 10–) (வருடாந்திரமல்ல) அடிப்படை மற்றும் டைலூட்டட்	(0.99)	(0.59)	(1.05)	(3.70)	(8.86)

குறிப்புகள்:
1. கம்பெனி குத்தகை வாடகை வருமானம் என்ற ஒரே பகுதியாக செயல்படுகிறது. எனவே தனி அறிக்கை தேவையில்லை.
2. 31.03.2023 அன்று முதலீட்டாளர் புகார் குறித்த நிலை:
காலாண்டு துவக்கத்தில் நிலுவை: இல்லை. காலாண்டில் பெறப்பட்டது: இல்லை, காலாண்டில் தீர்க்கப்பட்டது : இல்லை, தீர்க்கப்படாமல் உள்ளது : இல்லை.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கு கடந்த காலாண்டு/ஆண்டு முடிவுகள் நீருரூப் செய்யப்பட்டுள்ளன.
4 மேற்கண்ட முடிவுகள் 28 ஏப்ரல், 2023 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

		விவரங்கள்	31.03.2023	31.03.2022
		ஆஸ்திகள்		
(1)		**நடப்பு சாரா ஆஸ்திகள்**		
	ஏ.	சொத்து, நிலம் மற்றும் இயந்திரங்கள்	1234.25	1078.30
	பி.	நடைபெற்று வரும் மூலதன வேலை	17.17	198.61
	சி.	இதர இன்டேஜிபிள் ஆஸ்திகள்	-	-
	டி.	நிதி ஆஸ்திகள்		
		i) முதலீடுகள்	–	–
		ii) கடன் மற்றும் முன் பணங்கள்	11.48	10.38
		ii) இதர நடப்பு சாரா சொத்துக்கள்	-	10.96
	இ.	ஒத்திவைக்கப்பட்ட வரி ஆஸ்திகள் (நிகரம்)	-	0.18
(2)		**நடப்பு ஆஸ்திகள்**		
	ஏ.	பொருள் விவரப் பட்டியல்	-	-
	பி.	நிதி ஆஸ்திகள்		
		i) பணம் மற்றும் பணத்திற்கு இணையானவை	117.41	35.97
		ii) வர்த்தகம் பெறுதல்கள்	24.88	93.07
		iii) மற்றவை	5.85	2.01
	சி.	நடப்பு வரி ஆஸ்திகள் (நிகரம்)	27.77	34.18
	டி.	இதர நடப்பு ஆஸ்திகள்		
		மொத்த ஆஸ்திகள்	**1438.81**	**1463.66**
		ஈக்விடி மற்றும் பொறுப்புகள்		
		ஈக்விடி		
	ஏ.	ஈக்விடி பங்கு மூலதனம்	1152.55	576.28
	பி.	இதர ஈக்விடி	(1745.01)	(1520.59)
		பொறுப்புகள்		
1.		**நடப்பு சாரா பொறுப்புகள்**		
	ஏ.	நிதி பொறுப்புகள்		
		i) கடன்கள்	1320.52	1800.61
	பி.	இதர நடப்பு சாரா பொறுப்புகள்	388.00	188.14
	சி	ஒதுக்கீடுகள்	23.30	–
2.		**நடப்பு பொறுப்புகள்**		
	ஏ.	நிதி பொறுப்புகள்		
		i) வர்த்தகம் செலுத்தல்	75.93	176.61
		ii) இதர நிதி பொறுப்புகள்	223.52	242.61
	பி.	இதர நடப்பு பொறுப்புகள்	–	–
	சி	ஒதுக்கீடுகள்	–	–
		மொத்தம் சமம் மற்றும் பொறுப்புகள்	**1438.81**	**1463.66**

மார்ச் 31, 2023–ல் முடிவடைந்த காலத்திற்கான பணப்புழக்க அறிக்கை

(தொகை ரூபாயில்)

	31 மார்ச், 2023 (12 மாதங்கள்)		31 மார்ச் 2022 (12 மாதங்கள்)	
A. செயல்பாட்டு நடவடிக்கை களில் இருந்து பணப்புழக்கம்				
வரிக்கு முன் நிகர லாபம்/நஷ்டம்		(20,094,504)		(50,289,469)
அதற்கான சரிசெய்தல்கள்				
தேய்மானம்	5,385,366		6,030,869	
வட்டி செலுத்தப்பட்டது	17,371,125		17,831,292	
ஆஸ்திகள் விற்பனையில் (லாபம்)/நஷ்டம்	-		2,679,469	
வட்டி பெறப்பட்டது	344,983		(160,490)	
		23,101,474		26,381,140
செயல்பாட்டு மூலதனத்தை மாற்றுவதற்கு முன் பணப்புழக்கம்		3,006,969		(23,908,329)
செயல்பாட்டு ஆஸ்திகளில் (அதிகரிப்பு) / குறைவிற்கான சரிசெய்தல்				
வர்த்தகம் மற்றும் பிற வரவுகள்	6,818,478		15,354,012	
குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணங்கள்	(383,058)		4,777,952	
நீண்ட கால கடன்கள் மற்றும் முன் பணங்கள்	(109,788)		(57,724)	
பிற நடப்பு அல்லாத சொத்துக்கள்	1,096,079		-	
செயல்பாட்டு பொறுப்புகளில் (அதிகரிப்பு) / குறைவிற்கான சரிசெய்தல்				
வர்த்தகம் செலுத்த வேண்டியவை	(10,068,437)		16,604,936	
இதர நடப்பு பொறுப்புகள்	(1,908,826)		9,382,009	
இதர நடப்பு அல்லாத பொறுப்புகள்	19,985,422	15,429,870	4,949,682	51,010,867
செயல்பாடுகளில் இருந்து பெறப்படும் பணம்		18,436,839		27,102,538
நடப்பு வரி ஆஸ்திகள் (நிகரம்)		640,740		(389,709)
செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப் புழக்கம் (A)		19,077,579		29,712,829
B. முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து பணப்புழக்கம்				
நிலையான சொத்துகளின் கொள்முதல்/விற்பனை (நிகரம்)	(2,836,142)		(19,172,785)	
வட்டி வருமானம்	(344,983)	(3,181,125)	160,490	(19,012,295)
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்புழக்கம் (B)		(3,181,125)		(19,012,295)
C. நிதியளிப்பு நடவடிக்கைகளில் இருந்து பணப்புழக்கம்				
நீண்ட கால கடன்கள் (நிகரம்)	(48,008,501)		10,065,942	
சம பங்குகளின் வெளியீடு	57,627,700		-	
கடன் மீதான வட்டி	(17,371,125)	(7,751,926)	(17,831,292)	(7,765,350)
நிதிச் செயல்பாடுகளில் இருந்து நிகர பணப் புழக்கம் (C)		(7,751,926)		(7,765,350)
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமான நிகர அதிகரிப்பு / (குறைவு) A+B–C		8,144,528		(64,816)
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமான துவக்க இருப்புத் தொகை		3,596,759		3,661,575
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமான இறுதி இருப்புத் தொகை		11,741,287		3,596,759

இடம் : சேலம்
தேதி : 28.04.2023

தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டிற்காக
நிர்வாக இயக்குனர்